Tamil | தமிழ்

# 2026 -ஆம் ஆண்டுக்கான தொடக்கப் பள்ளிச் சேர்க்கை



பள்ளிப்படிப்பைத் தொடங்குவது குழந்தைகள், பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு உற்சாகமான நேரம். மாணவர் சேர்க்கை நடைமுறையை முடிந்தவரை எளிதாக்கி உங்களுக்கு உதவ விரும்புகிறோம்.

விக்டோரியாவில், *கல்வி மற்றும் பயிற்சி சீர்திருத்தச் சட்டம் 2006* -இன் கீழ் உங்கள் குழந்தை தங்களுக்கென ஒதுக்கப்பட்ட அருகிலுள்ள பள்ளிக்கு (உங்கள் ‘உள்ளூர்ப் பள்ளி’) செல்லும் உரிமை உள்ளது.

உங்கள் உள்ளூர்ப் பள்ளியாக இல்லாத ஒரு பள்ளியிலும் ஒர் இடத்திற்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். இடம் வழங்குதல் கொள்கையின்படி உங்கள் விண்ணப்பத்தைப் பள்ளி பரிசீலிக்கும். இடம் வழங்குதல் கொள்கை பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, 'பள்ளியில் மாணவர் சேர்க்கை' (Enrolling in school) பக்கத்துக்குச் செல்லவும்.

## அடிப்படைக் கல்விக்கான (ஆயத்தக் கல்வி) புதிய மாநிலவாரியான கால அட்டவணை

தொடக்கப் பள்ளியின் முதலாம் ஆண்டானது அடிப்படைக் கல்வி அல்லது தயார்ப்படுத்தும் கல்வி என அழைக்கப்படுகிறது. அனைத்து விக்டோரிய அரசாங்க தொடக்கப்பள்ளிகளும் பின்பற்றுவதற்கான புதிய அடிப்படைச் சேர்க்கைக்கான கால அட்டவணையை வெளியிட்டுள்ளோம் (4 -ஆம் பக்கத்தைப் பார்க்கவும்). இந்தக் கால அட்டவணை 2026 கல்வியாண்டுக்காக அடிப்படைக் கல்வியில் உங்கள் குழந்தையை எப்போது எப்படிச் சேர்ப்பது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள உதவுவதை நோக்கமாகக் கொண்டது.

## தொடக்கப்பள்ளியின் முதலாம் ஆண்டில் எனது குழந்தையை நான் எப்போது சேர்க்க வேண்டும்?

உங்களின் குழந்தை பள்ளிக்குச் செல்ல ஆரம்பிக்கும் ஆண்டு ஏப்ரல் 30 -ஆம் தேதி 5 வயதுடையவராக இருக்க வேண்டும்.

6 வயது ஆகிவிட்ட குழந்தைகள் பள்ளிக்குச் செல்வது கட்டாயம்.

பள்ளி ஆண்டு 2026-க்கு விக்டோரிய அரசாங்க ஆரம்பப் பள்ளியில் உங்கள் குழந்தையைச் சேர்ப்பதற்கு, 25 ஜூலை 2025க்கு முன்னர் பள்ளிக்கான சேர்க்கை விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கவும்.

## தொடக்கப்பள்ளியின் முதலாம் ஆண்டில் எனது குழந்தையை நான் எப்படிச் சேர்ப்பது?

தொடக்கப்பள்ளியின் முதலாம் ஆண்டில் உங்கள் குழந்தையைச் சேர்ப்பதற்கு இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்:

1. 'எனது பள்ளியைக் கண்டறிக' (Find my School) இணையதளத்தில் உங்கள் உள்ளூர்ப் பள்ளியைக் கண்டறியவும் (கீழே காண்க).
2. பள்ளிச் சுற்றுப்பயணத்தை முன்பதிவுசெய்ய அல்லது பள்ளி குறித்தும் சேர்க்கை விண்ணப்ப நடைமுறை குறித்தும் மேலும் அறிந்துகொள்ள அரசு தொடக்கப்பள்ளியைத் தொடர்புகொள்ளவும்.
3. 'அடிப்படைக் கல்வி (ஆயத்தக் கல்வி) சேர்க்கை' (Enrolling in Foundation (Prep)) என்ற பக்கத்திலிருந்து அடிப்படைக் கல்வி (ஆயத்தக் கல்வி) சேர்க்கைத் தகவல் தொகுப்பைப் பதிவிறக்கம் செய்யவும். இந்த பொதி செவ்வாய் 22 ஏப்ரல் 2025-க்கு முன்னர் கிடைக்கும் அத்துடன் ஒரு விண்ணப்பப்படிவம் அதற்குள் இருக்கும். பூர்த்தி செய்வதற்கான படிவத்தின் நகலையும் பள்ளி உங்களுக்கு வழங்கலாம்.
4. **வெள்ளிக்கிழமை 25 ஜூலை 2025**க்கு முன்னர் ஓர் அடிப்படை சேர்ப்பு விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கவும்.

5. **திங்கட்கிழமை 28 ஜூலை மற்றும் வெள்ளிக்கிழமை 8 ஆகஸ்ட் 2025** ஆகிய தினங்களுக்கிடையில் உங்கள் விண்ணப்பத்தின் முடிவு உங்களுக்குத் தெரிவிக்கப்படும். உங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால், நீங்கள் அதனை **வெள்ளிக்கிழமை 22 ஆகஸ்ட் 2025**க்கு முன்னர் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.
6. **2025 பருவகாலம் 4 (term)**இன் பொழுது சேர்க்கைத் தகவல்கள் மற்றும் நிலைமாற்ற அமர்வுகளில் பங்குபற்றவும்.
7. உங்கள் குழந்தை **28 ஜனவரி 2026 புதன்கிழமையிலிருந்து** அடிப்படைக் கல்வியை ஆரம்பிக்கும்.

## எனது உள்ளூர்ப் பள்ளியைக் கண்டறிவது எப்படி?

கீழ்க்கண்ட படிகளைப் பின்பற்றி 'எனது பள்ளியைக் கண்டறிக' (Find my School) இணையதளத்தில் உங்கள் உள்ளூர்ப் பள்ளியைக் கண்டறியவும்:

1. உங்கள் உலாவியில் findmyschool.vic.gov.au என்று உள்ளீடு செய்யவும்.
2. ஆரம்பிப்பதற்காக உங்கள் முகவரியை பதிவுசெய்யவும் ('Enter your address to get started') என்பதற்குக் கீழே உங்கள் நிரந்தர முகவரியை உள்ளீடு செய்யவும்.
3. ஆட்சேர்ப்பு ஆண்டு ('Enrolment year') என்பதற்குக் கீழ் 2026 என்று தேர்வு செய்யவும். **குறிப்பு:** 2026 பள்ளி வலையங்கள் பருவகாலம் 1, 2025இன் பிற்பகுதியில் கிடைக்கும்.
4. பாடசாலை வகை ('School type') என்பதற்குக் கீழே ஆரம்ப (Primary) என்பதைத் தேர்வு செய்யவும்.

அதன்பின் வரைபடத்தில் உங்கள் முகவரி, உங்கள் உள்ளூர்ப் பள்ளி மற்றும் இடதுபுறம் பள்ளியின் தொடர்பு விபரங்கள் காட்டப்படும். நீங்கள் அந்தப் பக்கத்தின் அடிப்பகுதியில் பார்த்தால், உங்கள் முகவரிக்கு மிக நெருக்கமாக உள்ள 5 பள்ளிகளையும் காட்டும்.

'Search for school' என்பதற்குக் கீழே பள்ளியின் பெயரை வைத்தும் நீங்கள் தேட முடியும்.

## எங்கள் உள்ளூர்ப் பள்ளியாக இல்லாத அரசு தொடக்கப் பள்ளிக்கு என்னுடைய குழந்தை விண்ணப்பிக்கலாமா?

ஆம், உங்கள் உள்ளூர்ப் பள்ளி தவிர வேறு பள்ளிகளுக்கும் நீங்கள் விண்ணப்பிக்கலாம். இடம் வழங்குதல் கொள்கை மற்றும் கிடைக்கக்கூடிய இடத்திற்கு ஏற்ப உங்கள் விண்ணப்பத்தைப் பள்ளி பரிசீலிக்கும். விண்ணப்பங்கள் எவ்வாறு முதன்மைப்படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றிய தகவலை நீங்கள் 'பள்ளியில் மாணவர் சேர்க்கை' (Enrolling in school) பக்கத்தில் காணலாம்.

## எனது சேர்க்கை விண்ணப்பம் ஏற்கப்படவில்லை என்று எனக்குக் கடிதம் வந்தால் என்ன நடக்கும்?

உங்கள் குழந்தையை வேறொரு பள்ளியில் சேர்ப்பதற்கு நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும். உங்கள் குழந்தைக்கு அவர்களது உள்ளூர்ப் பள்ளியில் ஒரு இடம் உத்தரவாதமாக உண்டு. உங்கள் குழந்தையின் உள்ளூர்ப் பள்ளி அவர்களது நிரந்தர வீட்டு முகவரியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. உங்கள் குழந்தையின் உள்ளூர்ப் பள்ளியைக் கண்டறிய 'எனது பள்ளியைக் கண்டறிக' (Find my School) பக்கத்துக்குச் செல்லவும். உங்கள் குழந்தையின் சேர்க்கைக்கான முகவரியை உறுதிப்படுத்தவும் 'பள்ளியில் மாணவர் சேர்க்கை' (Enrolling in school) பக்கம் உதவுகிறது.

இந்த முடிவை நீங்கள் மேல்முறையீடும் செய்யலாம். 'அடிப்படைக் கல்வி (ஆயத்தக் கல்வி) சேர்க்கை( மாணவர் ஆட்சேர்ப்பு)' (Enrolling in Foundation (Prep)) பக்கமானது ஒரு சேர்க்கை விண்ணப்ப முடிவு மேல்முறையீட்டு நடைமுறைக்கான விபரங்களைக் கொண்டுள்ளது.

## சேர்க்கைக்கான காலக் கெடுவினை நான் தவறவிட்டால் என்ன நடக்கும்?

பள்ளிப் பருவகாலம் 2, 2025இலிருந்து எந்த நேரத்திலும் 2026 பள்ளி ஆண்டுக்கான அடிப்படைக்கல்விக்கு உங்களின் குழந்தையைச் சேர்ப்பதற்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

வெள்ளிக்கிழமை 25 யூலை 2025 க்கு முன்னர் சேர்க்கை விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறு நீங்கள் கேட்கப்படும்வேளை, சேர்க்கைக் காலவரையறையத் தவறவிட்டவர்கள், நிரந்தர வசிப்பிடத்தைவிட்டுச்சென்றவர்கள், அல்லது விக்டோரியாவுக்கு புதிதாக வந்துசேர்ந்தவர்களிடமிருந்து இந்தத் திகதிக்குப்பின்னர் மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் இன்னமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இடங்களை வழங்கும் திணைக்களத்தின் கொள்கைக்கு அமைவாக, 25 ஜூலை 2025க்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் சேர்க்கை விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும்வேளை பள்ளியால் செயற்படுத்தப்படும்

## தொடக்கப்பள்ளியில் சேர்க்கை குறித்த கூடுதல் தகவல்களை நான் எங்கு காணலாம்?

அடிப்படைக் கல்விச் சேர்க்கை நடைமுறை குறித்த கூடுதல் தகவல்களுக்கு உங்கள் உள்ளூர்த் தொடக்கப்பள்ளியில் கேளுங்கள்.

பள்ளிப்பருவகாலம் 2, 2025 இன்ஆரம்பத்தில், 'அடிப்படையில் சேர்க்கை' (ஆயத்தம்) (Enrolling in Foundation (Prep) page.) எனும் பக்கத்தில் அடிப்படை சேர்ப்பு செயல்முறை குறித்த ஒரு தகவல் பொதியையும் நீங்கள் காணலாம்.

தகவல் தொகுப்பை மொழிபெயர்ப்பதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து உங்கள் உள்ளூர்த் தொடக்கப்பள்ளியுடன் தொடர்புகொண்டு பேசவும்.

## உதவிக்கு நான் யாரைத் தொடர்பு கொள்வது?

இடமாறுதல் ஒருங்கிணைப்பாளர், சேர்க்கை அதிகாரி அல்லது நீங்கள் விண்ணப்பிக்க விரும்பும் தொடக்கப்பள்ளியின் முதல்வர் ஆகியோர் சேர்க்கை நடைமுறை குறித்த உங்களுக்கு எழக்கூடிய எந்தக் கேள்விகளுக்கும் உதவமுடியும்.

## பயனுள்ள இணைப்புகள்

உங்களின் குழந்தை ஆரம்பப்பள்ளியை ஆரம்பிக்கும்போது கீழேயிருக்கும் உங்களுக்கு உதவக்கூடிய பயனுள்ள சில இணைப்புகளைத் தயவுசெய்து பாருங்கள்:

எனது பள்ளியைக் கண்டறியவும் – findmyschool.vic.gov.au

பள்ளி மண்டலங்கள் பற்றிய தகவல்கள் – vic.gov.au/school-zones

'அடிப்படைக் கல்வி (ஆயத்தக் கல்வி) சேர்க்கை' – vic.gov.au/enrolling-foundation-prep

'பள்ளியில் மாணவர் சேர்க்கை' – vic.gov.au/how-choose-school-and-enrol

மாற்றுத்திறன் மற்றும் உள்ளடக்கிய கல்வி – vic.gov.au/disability-and-inclusive-education

பிராந்திய அலுவலகத் தொடர்புகள் – vic.gov.au/office-locations-department-education

# 2025-26 க்கான காலவரையறை

| 2025 தேதிகள் | செயல்பாடு |
|---|---|
| **பருவகாலம் 2: செவ்வாய்க்கிழமை 22 ஏப்ரல் 2025- வெள்ளிக்கிழமை 4 ஜூலை 2025** | |
| **பருவகாலங்கள் 1 மற்றும் 2, 2025** | தங்கள் குழந்தையை 2026 -ஆம் ஆண்டிற்கான அடிப்படைக் கல்விக்குச் (ஆயத்தக்கல்வி) சேர்ப்பதற்குத் தேடிக்கொண்டிருக்கும் குடும்பங்களுக்காகச் சுற்றுலாக்கள், தகவல் அமர்வுகள் மற்றும் பிற நடவடிக்கைகளை தொடக்கப்பள்ளிகள் நடத்துகின்றன. |
| **பருவகாலம் 2, 2025 ஆரம்பத்திற்கு முன்னர்** | 2026 கல்வியாண்டுக்கான பள்ளி மண்டலங்கள் Findmyschool.vic.gov.au இணையதளத்தில் நேரலையில் இணையவுள்ளன.<br>2026 -ஆம் ஆண்டில் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட அருகிலுள்ள பள்ளியைக் கண்டறிய பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் findmyschool.vic.gov.au என்ற இணையதளத்துக்குச் செல்ல வேண்டும்.<br>பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான சேர்க்கைத் தகவல் தொகுப்பானது 'அடிப்படைக் கல்வி (ஆயத்தக் கல்வி) சேர்க்கை' (Enrolling in Foundation (Prep)) பக்கத்திலிருந்து பதிவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம். |
| **வாரம் 1, பருவகாலம் 2 2025 முதல்** | எதிர்பார்த்திருக்கும் குடும்பங்களுக்கும், அவர்களது உள்ளூர்ச் சமூகத்துக்கும் சேர்க்கைத் தகவல் தொகுப்புகளைத் தொடக்கப்பள்ளிகள் விநியோகிக்கலாம். |
| **வாரம் 1, பருவகாலம் 2, 2025 முதல்** | **சேர்க்கை விண்ணப்பங்கள் ஆரம்பம்** – பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் தங்களது பூர்த்தி செய்யப்பட்ட சேர்க்கை விண்ணப்பத்தை இந்தத் தேதியிலிருந்து அரசுத் தொடக்கப்பள்ளியில் சமர்ப்பிக்கலாம். |
| **பருவகாலம் 3: திங்கட்கிழமை 21 ஜூலை 2025 - வெள்ளிக்கிழமை 19 செப்டெம்பர் 2025** | |
| **வெள்ளிக்கிழமை 25 ஜூலை 2025க்கு முன்னர்** | **சேர்க்கை விண்ணப்பங்களுக்கான காலக்கெடு** – பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் தங்களது பூர்த்தி செய்யப்பட்ட சேர்க்கை விண்ணப்பத்தை இந்தத் தேதிக்குள் அரசுத் தொடக்கப்பள்ளியில் சமர்ப்பிக்கலாம். |
| **திங்கட்கிழமை 28 ஜூலை-க்கும் வெள்ளிக்கிழமை 8 ஆகஸ்ட் 2025-க்கும் இடையில்** | திணைக்களத்தின் இடம் வழங்குதல் கொள்கையின்படி, தொடக்கப்பள்ளிகள் அடிப்படைக் கல்வி (ஆயத்தக்கல்வி) சேர்க்கை முடிவுகளைப் பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு எழுத்தில் தெரிவிக்கும். இதில் ஓர் இட வழங்கல் கடிதம், சேர்க்கையை உறுதிப்படுத்தும் ஒரு கடிதம் அல்லது ஒரு வெற்றியடையாத விண்ணப்பக் கடிதம் ஒன்றும் இருக்கலாம்.<br>வெற்றியடையாத விண்ணப்பக் கடிதம் ஒன்றைப் பெற்ற பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் தொடக்கப்பள்ளிக்கு எழுத்துப்பூர்வமாக மேல்முறையீடு செய்யத் தொடங்கலாம். |
| **வெள்ளிக்கிழமை 22 ஆகஸ்ட் 2025-க்கு முன்னர்** | இட வழங்கல் கடிதம் ஒன்றைப் பெற்ற பெற்றோர்களும் பாதுகாவலர்களும் இந்தத் தேதிக்குள் தங்கள் குழந்தைக்குக் கொடுக்கப்பட்ட இடத்தை ஏற்றுக் கொள்வதைக் குறிப்பிட வேண்டும். |
| **வெள்ளிக்கிழமை 22 ஆகஸ்ட் 2025-க்கு முன்னர்** | பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள், எழுத்திலான மேன்முறையீட்டைத் தொடக்கப்பள்ளிக்குச் சமர்ப்பிப்பதற்கான **இறுதித் தேதி**. |
| **வெள்ளிக்கிழமை 5 செப்டெம்பர் 2025-க்கு முன்னர்** | தொடக்கப்பள்ளிகள் இந்தத் தேதிக்குள் அனைத்துப் பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு அவர்களது மேல்முறையீட்டின் முடிவை எழுத்தில் தெரிவிக்கும். |
| **வெள்ளிக்கிழமை 19 செப்டெம்பர் 2025க்கு முன்னர்** | தொடக்கப்பள்ளியில் சேர்ப்பதற்கான தங்கள் மேல்முறையீட்டில் வெற்றி பெறாத பெற்றோர்களும், பராமரிப்பாளர்களும் சம்பந்தப்பட்ட பிராந்திய இயக்குநரிடம் எழுத்துப்பூர்வமாக ஒரு மேல்முறையீட்டினைச் சமர்ப்பிப்பதற்கான **இறுதி தேதி**. |
| **பருவகாலம் 4: திங்கட்கிழமை 6 அக்டோபர் 2025- வெள்ளிக்கிழமை 19 டிசெம்பர் 2025** | |
| **பருவகாலம் 4, 2025 இதன் பொழுது** | இடமாறுதல் அமர்வுகளை தொடக்கப்பள்ளிகள் நடத்துகின்றன. |
| **வெள்ளிக்கிழமை 31 அக்டோபர் 2025-க்கு முன்னர்** | இந்தத் தேதி அளவில் அனைத்துப் பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு அவர்களது மேல்முறையீட்டின் முடிவை பிராந்தியங்கள் எழுத்தில் தெரிவிக்கும். முடிவு திகதியாகிய வெள்ளிக்கிழமை 19 செப்டெம்பர் 2025க்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்படும் மேன்முறையீடுகளுக்கு மாத்திரம் இது பொருத்தமாகும். |